## 1.23 1995–96 கடலூர் மாவட்டம்–பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்–வட்டார வளர்ச்சி அலுவலர் குடியிருப்பு கட்டுவதற்கான திருத்திய நிர்வாக அனுமதியும், கூடுதல் செலவினமான ரூ.1.80 இலட்சத்தையும், ஊராட்சி ஒன்றிய பொதுநிதியிலிருந்து செலவிட அனுமதியும் வழங்குதல்

---

ஊரக வளர்ச்சி (தி4) துறை

அரசாணை (நிலை) எண்.140 நாள் : 18.5.2001

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.136, ஊ. வ.துறை, நாள் 24.7.95
2. அரசு ஆணை (நிலை) எண்.161, ஊ. வ.துறை, நாள் 5.8.99
3. ஊரக வளர்ச்சி ஆணையர் கடிதம் எண்.34378/2000/திஅ1, நாள் 19.8.2000 மற்றும் 2/3/2001

**ஆணை**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் குடியிருப்பு கட்டுவதற்கு முதற்கட்டமாக 1995–96ம் ஆண்டு பகுதி-II திட்டத்தின் கீழ் ரூ. 4.50 லட்சம் அனுமதிக்கப்பட்டது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்படி கட்டடம் கட்ட ரூ.5.20 லட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு எஞ்சியுள்ள தொகையான ரூ.0.70 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

2. ஊரக வளர்ச்சி ஆணையர் தனது கடிதத்தில் தற்போது மேற்கண்ட பணிக்கு 2000–2001ம் ஆண்டு விலைவாசிப்படி ரூ.7.00 லட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கக் கோரியுள்ளார். மேலும் ஏற்கனவே அரசால் ஒப்பளிக்கப்பட்டு/அனுமதி வழங்கப்பட்ட ரூ.5.20 லட்சம் போக தற்போது தேவைப்படும் எஞ்சிய ரூ.1.80 லட்சத்தை பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து மேற்படி கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கு வழங்கலாம் என பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

3. அரசு இதனை நன்கு ஆய்வு செய்தது, மேலே பத்தி 2–ல் உள்ள ஊரக வளர்ச்சி ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் குடியிருப்பினை ரூ. 7.00 லட்சத்தில் கட்டுவதற்கு திருத்திய நிர்வாக அனுமதி அளித்தும், ஏற்கனவே அரசு இதற்காக ரூ.5.20 இலட்சம் வழங்கியுள்ளதால் தற்போது இக்கட்டிடத்தை கட்டிமுடிப்பதற்கு கூடுதலாக தேவைப்படும் ரூ.1.80 லட்சத்தை பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து செலவிட அனுமதி அளித்தும் அரசு ஆணையிடப்படுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.26155/ஊவ/01– நாள்16.4.2001 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்